24.08.2022

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.24 /2016**

அ.சா.**5**

பெயர். **பிரகாஷ்**

சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் சாட்சி இன்று 24.08.2022 மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சத்தம் கேட்டு தான் சம்பவம் இடம் போனேன் என்றால் சரிதான். யாருடைய அலறல் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் சென்ற போது அந்த இடத்தில் ஒரு நபர் இறந்துகிடந்தார். அந்த நபரின் முகத்தில் இரத்தமாக இருந்தது. தலை சரிந்து கிடந்தது. மூச்சு, பேச்சு இல்லை. அந்த இடத்தில் இருந்து யாரும் ஓடினார்களா என்றால் ஓடினார்கள். கிழக்கு பக்கமாக 2 பேர் ஓடினார்கள். மேற்கு பக்கமாக ஒரு நபர் ஓடினார். அவ்வாறு ஓடிய நபர்களுக்கு முன்னால் யாரும் ஓடினார்களா என்றால் யாரும் ஓடவில்லை. எங்களை பார்த்தபிறகு தான் அந்த நபர்கள் ஓடினார்கள். நாங்கள் 6 பேர் சம்பவ இடத்திற்கு ஓடினோம். ஆறுமுகம், சிவா, உமர்நாத், மணிகண்டன், ஓட்டல் மாஸ்டர் மற்றும் நானும் ஓடினோம். ஓட்டல் மாஸ்டர் பெயர் தற்போது நினைவு இல்லை. என்னுடன் ஓடிவந்தவர்கள் ஏற்கனவே எனக்கு தெரியும். நான் ஓட்டல் கடைக்கு செல்வதால் அவர்களை தெரியும். நானும் ஆறுமுகம், உமர்நாத், சிவா ஆகியோர் எதிரிகளை பிடித்தோம். மற்றும் இருவர் பின்னால் வந்தார்கள். நானும், ஆறுமுகமும், உமர்நாத், சிவா, ஓட்டல் மாஸ்டர் ஆகியவர்கள் சம்பவ இடத்தில் பாடியை முதலில் பார்த்தோம். நாங்கள் பிடித்து வைத்து அடித்தோம் என்றால் சரியல்ல. பிடித்து உட்கார வைத்து காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னோம். போலீசார் வரும்போது இரவு 11, 11.30 மணி இருக்கும். ஆறுமுகம் தான் போலீக்கு போன் செய்து தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு அருகில் டாஸ்மார்க் கடை உள்ளதா என்றால்

300மீ தூரத்தில் டாஸ்மார்க் கடை உள்ளது. சம்பவ இடத்தில் எல்லோரும் இருந்து மது குடிப்பார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியத்தை தான் போலீஸ் விசாரணையில் சொன்னேன். சம்பவத்தன்றே இரவு காவல் நிலையம் சென்றோம். போலீசார் மறுநாள் காலையில் விசாரணைக்காக வாருங்கள் என்று சொல்லி மறுநாள் விசாரித்தார்கள். சம்பவத்தன்று இரவு முகவரியை மட்டும் வாங்கி அனுப்பிவிட்டார்கள். சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். நான் சம்பவம் குறித்து தெரியாதும் என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

24.08.2022

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.24 /2016**

அ.சா.**2**

பெயர். **உமர்நாத்**

சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் சாட்சி இன்று 24.08.2022 மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**<u>1வது எதிரீ தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவத்தன்று சத்தம் கேட்டு தான் சம்பவம் இடம் சென்றேன் என்றால் சரிதான். அய்யோ அம்மா என்று அலறல் கேட்டு ஓடினேன் என்றால் சரிதான். யாருடைய அலறல் தெரியது என்றால் சரிதான். அலறிய நபர்கள் யார் தாக்குகிறார்கள் என்று பெயர் சொல்லி அலறவில்லை என்றால் சரிதான். யார் முதலில் பாடியை பார்த்தார் என்றால் ஆறுமுகம். அங்கு கிடந்த நபருக்கு உயிர் இருந்ததா என்றால் அவர் இறந்துகிடந்தார். எத்தனை பேர் எந்த திசை நோக்கி ஓடினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகளுக்கு முன்பு ஓடிய நபர்களை பார்த்தேனா என்றால் நான் பார்க்கும் போது எதிரிகளுக்கு முன்பு யாரும் ஓடவில்லை. ஆறுமுகம், சிவா, மணிகண்டன், பிரகாஷ் மற்றும் நானும் எதிரிகளை பிடித்தோம். நாங்கள் பிடித்த நபர்களை தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் ஒரு அய்யப்பன் இருக்கிறார்( சாட்சி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி இருந்த 1வது எதிரியை அடையாளம் காட்டுகிறார்.) மற்றொரு அய்யப்பன் இங்கு இல்லை. எதிரிகளை பிடித்து கட்டி வைத்தப்பிறகு போலீசார் வந்தார்களா என்றால் நாங்கள் இன்பார்ம் செய்து வந்தார்கள். போலீசார் வந்த நேரம் இரவு 11.30 மணி முதல் 12.00 மணி இருக்கும். எதிரிகளை எத்தனை பேர் கட்டி வைத்து அடித்தோம் என்றால் நாங்கள் அடிக்கவில்லை. போலீசார் வந்த பிறகு அவர்களை கூப்பிட்டு சென்றார்கள். நாங்கள் கட்டி வைத்து பிறகு கேட்ட போது எதிரிகள் எதாவது சொன்னார்களா என்றால் இல்லை. அவர்கள் உட்கார்ந்த இடத்தின் அருகில்

டாஸ்மார்க் கடை இருந்ததா என்றால் இருந்தது. அந்த பகுதியில் மது குடிப்பவர்கள் பாட்டிலை வீசி விட்டு செல்வார்கள் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சுமார் 7 முறை வந்தேன். நான் இந்த நீதிமன்றம், மேலே உள்ள நீதிமன்றம் வந்துள்ளேன். போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்று எனக்கு நினைவு இல்லை. போலீசார் எதிரிகளை அழைத்து சென்ற பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை விசாரித்தார்கள். எந்த தினம் என்னை போலீசார் விசாரிதார்கள் என்று எனக்கு தெரியாது. அதன்பிறகு நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. இறந்து கிடந்த சடலத்தின் அருகில் யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. அலறல் சத்தம் கேட்டு நாங்கள் சென்றதால் ஆயுதமோ மற்ற பொருட்களோ எடுத்து சென்றோமா என்றால் இல்லை. அந்த இடம் காடு மாதிரி இருக்கும் என்றால் சரியல்ல. அந்த இடம் பிளாட் போட்டுள்ள இடம்.

**<u>3வது எதிரீ தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3ம் எதிரியை நான் சம்பவ இடத்தில் பார்த்து இருக்கிறேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் தான் முதன்முறையாக 3வது எதிரியை பார்த்தேன். வேற எங்கும் நான் அவரை பார்த்தது இல்லை.